ஸ்ரீ

சற்புருஷநிலைமையும்

வேதாந்த ரஹஸ்யங்களையும் விளக்கும்

சூடாலை கதை.

இஃது

வாசிட்ட ராமாயணத்திலிருந்து

வே. பாலகிருஷ்ண முதலியாரால்,

மொழிபெயர்க்கப்பட்டு

ஸ்ரீமான். வி. சுந்தரம்பிள்ளை அவர்களால்,

பார்வையிடப்பட்டு

ஜவுளி வியாபாரர்

ஸ்ரீமான். ஆ. கோவிந்தராஜ முதலியாரவர்கள்

வேண்டுகோளின்படி

சென்னை திருவல்லிக்கேணி

ஆர்கில் அச்சுயந்திரசாலையில் பதிப்பிக்கப்பட்டது.

1908.

விளம்பரம்.

		ரூ.	அ.	ப.
அத்யாத்ம ராமாயணம், கலிகோபைண்டு	...	1	4	0
பக்தமாலவசனம் -(183 சரித்திரங்கள்)	...	2	2	0
வினாவிடைமாலை	...	0	1	0
பிபாஜிராஜன் சரித்திரம்	...	0	2	0
அபில கீதை	...	0	1	0
பிக்ஷு கீதை	...	0	1	6
சூடாலை கதை	...	0	1	0
நாரதபக்தி சூத்திரங்கள் ஹரிதாதி	...	0	2	0

18 செங்கல்வராயு முதலி தெரு,

திருவல்லிக்கேணி.

ஸ்ரீபார்த்தஸாரதி குரவே நம:

கர்ம நிலைமையையும்
வேதாந்த ரஹஸ்யங்களையும் விளக்கும்,

சூடாலை கதை.

శ్లో॥ పద్మాసనోపవిష్టం పాదయుగే న్యస్తహస్తాగ్రభారం
పాతిన్యస్ఫోధముద్రం పరమాచార్యం పరాంకుశం వందే.

ஸ்லோகம்.

பத்மாசனோ பவிஷ்டம் பாதயுகளோ ந்யஸ்த சைதன்ய பாரம்
பாதத்வ போத முத்ரம் பரமாசாரிடம் பராங்குசம் வந்தே.

மாளவ தேசத்தில், த்வாபர யுகாரம்பத்தில், சிகித்வஜ னென்னும் அரசன், நீதி நெறி தவறாமல் துராசை முதலிய துர்க்குணங்களில்லாமல் உதாரமுள்ள உத்தம குணங்களை யுடைய வனாய் சமதமாதி சத்குணங்களைப்பொருந்தி மேன்மையுடன் பிரஜா பரிபாலனஞ் செய்துவந்தான். சௌராஷ்ட்ர தேசத் தரசன் குமாரத்தியாகிய சூடாலையென்னுங் கன்னிகையை அவன் மணம் புரிந்தான். அவள் மயிலைப்போன்றவள். சத்குணங்களில் அவளுக்கு நிகர் ஒருவருமில்லை. சகல கலைஞானங்களுங் கற்ற வள், பர்த்தாவின் சேவையில் பரமப்ரீதியுடையவளாய் அவன் மனதிற்கிசைந்து நடந்து வந்ததனால் இருவர் மனமு மொன்றாகி யினிமையுடன் வாழ்ந்திருந்தார்கள். இரண்டு சரீரங்களுக்கும் ஒரு பிராணனைப்போல இருவரும் எவ்வளகாலத்தைக் கழித்து வருமளவில் அவர்களுக்குள் விரக்தி தோன்றி விசாரிக்கத் தொடங்கினார்கள். ஓர் நிலைமையில்லாத இளமைப் பருவமானது உடைப்பட்ட கலசத்தின் ஜலம்போலே ஓடிப்போமே! நீரிலிருக்கும் செந்தாமரைமேல் பனிக்கட்டி நிறைவதுபோல மூப்பு வந்து விடுமே! கரதலஜலம்போலே ஆயுள் கழிந்துவிடுமே! ஸாயங்காலத் தில் ஆற்று நீர்போல சௌந்தர்யமும் லாவண்யமும் போய்

விடுமே! நல்ல சுகங்களெல்லாம், வில்லைவிட்டு நீங்கின அம்புகளைப் போல, நிலைமையற்று நீங்கிவிடுமே! இந்த சமுசாரத்தில் முழுகு மவர்களுக்குச் சுகமுண்டோ? எதை யடைந்தால் மனமானது திரும்பி யெதிலுஞ் செல்லாதோ அந்த நிலைமை மேன்மையாம். அது அத்யாத்மஞானசாஸ்திரத்தை ஸ்திரமுடன் விசாரித்தாலுண் டாம். அது ஜனன வியாதிக்கு மருந்தாம், இதனைச்செய்யாமல் பிறப்பறுமென் றிருவரு மெண்ணி அது சர்வேஸ்வரன் திருவரு ளின்றிக் கிடையாதென்று தெரிந்து ஈஸ்வரோபாசனையைச் செய் யத்தொடங்கி அதற்கடுத்த சத்துக்கள் சார்பை அடைந்தவர்களா யும் ஆராதனைக்கேற்ற செய்கையில் இடைவிடாத பழக்கத்தை யுடையவர்களாயும் ஆசார சீலர்களாகியும் நெடுங்காலம் மிகுந்த களிப்புடன் இந்நெறியில் விளங்கினார்கள்.

இப்படியிருக்கச் சூடாலை தீவிரமான பக்குவ முடையவ ளாய், தத்துவ வித்துக்களா லனுக்கிரஹிக்கப்பட்ட சாஸ்திரார்த் தங்களை செம்மையாகக்கேட்டு, மனதிலவைகளை திருத்தமாகத்தரி த்து, உலக விவஹாரங்களை மனதில் நாட்டாமல் நல்ல வறிவினால் விசாரிக்கத் தொடங்கினாள். முதல் தன்னைநோக்கி, நானென்று எதைச் சொல்லுகின்றோம்? மனதிற்கு நீங்காத மோஹம்யாது? அது யாருடையது? எந்தப்பிரகாரத்தால் எவ்விடத்திலுண்டாயி ற்றென்று தன்னுள் நினைத்து முதல் தோற்றுவதான தேஹத்தை நானென்னில் அது ஜடமாயிருப்பதனால் அதை நானென்று சொ ல்லத்தக்கதன்று. கருமேந்திரியை ஞானேந்திரியங்கள் ஜடமாகி வெவ்வேறாயிருப்பதனால் அவையும் நானன்று. தடியினால் ஒட்டை யசைக்க அது அசைவதுபோல ஹிதமாகா(சூக்ஷமாகா) மனதினால் இந்த பத்திந்திரியங்களும் சேஷ்டைசெய்யுமல்லவா? இந்த மன தும் புத்தியினால் சலனமடைந்த தாதலால் அதுவும நானல்லேன். இந்த புத்தியும் அஹங்காரத்தால் அசைவுற்றதாதலால் அதுவும் நானல்லேன். இவ்வஹங்காரமும் ஜீவனாலே தோற்றுகிறபடியால் அதுவும் நானன்று. இந்த ஜீவன் தொழிலே வடிவாய் பிராண காரமாய் ஹிருதயத்தில் சுகுமாரமாய் பிரத்தியகாத்மாவாலே சுகிப்பனாதலால் அவனும் நானல்லேன். ஜீவனை சுகிப்பிக்கின்ற இதுவே ஆத்மதத்துவ அறிவென்றுணர்ந்தேன். விஷயங்களா லிது களங்கமடையாமல் நித்தியமான ஞானஸ்வரூபமாம். இத னால் ஜீவன் ஜீவிப்பன். இப்படி விஷயவஸ்துக்களில் பிரமிக்கி

ன்ற ஜீவனுடைய தொடர்ச்சியைச் சொல்லப்புகில் வாயுவினால் வரும் வாசனைபோலவும் பள்ளத்திற்றங்கும் ஜலம் போலவுமாம். உண்மையான சித்சக்தியானது மித்தையாகியு மூடமாகியு மிருக்கின்ற விஷயங்களின் புணர்ச்சியாய் களங்கமுள்ள ஜடரூபமாய் ஜலத்திலிருக்கு மக்கினியைப்போல தன் உருவத்தை மறந்து ஜீவனாய் விஷயத்தை விரும்புதலினால் பொய்யான ஜடத்தன்மையை வகித்திருக்கிறதே? அய்யோ! என்னவதிசயம்! இந்த ஞானம் எனக்கு தோன்றிற்றே! காலாந்தரத்திலறியவேண்டியதை இப்போதே அறிந்தேனே! முதன்மையான சித்தின் வியாபகத்தை சிந்தனை செய்யாதிருந்ததனால் காரணமுதலாகியவெல்லாம் உண்டாயினவன்றோ! ஆத்மஞானசிந்தனையினால் அவையாவு மசத்கல்பமேயாயின. இப்படி பிரத்யகாத்மாவான வென்சொரூபம் எவ்விடத்திலுமுள்ள பூரணஞான சொரூபமான பரமாத்மாவினில் அந்தர்பூதம். இத்தை பரப்பிரம்மமென்றும் பேரறிவென்றும் சொல்லுவார்கள். இது சத்தாகியும் ஸ்வயம்பிரகாசமாகியும் நித்தியமாகியும் பரிசுத்தமாகியும் விளங்குமென்றிவ்விதமாக சூடாலை விசாரணைசெய்து தன் (ஆத்ம) சொரூபத்தில் நாடோறும் தங்கிக்கின்ற நிலைமையால் ஆசைகள் நீங்கி விஷய சுக மெவ்வளவு மில்லாமல் செய்கையு மில்லாமல் பற்றில்லாத செயல்களைச் செய்து மனம் பழுத்து தனது விவேகத்திலுண்டான பழக்கமான வெள்ளமோட மேன்மையான புஷ்பக்கொடிபோல் விளங்கினாள்.

இப்படி சிலகாலங்கழிய சூடாலை பிரம்ம தேஜஸுடன் பிரகாசிக்க இந்தத்தேஜஸை இனிமையாக சிகித்வஜன் பார்த்து ஓகாதலி! எவ்வனத்திலுள்ள வழகை திரும்பபெற்றவள்போலவும், தேவாமிர்தம் புசித்தவள்போலவும், பிரஹ்மபதத்தை யடைந்தவள் போலவும், பூரணானந்தம்பெற்றவளைப்போலவும், பேரழகையுடையவளாயிருக்கிறாய். போகங்களை யிச்சியாமல், உபசாந்தமாய், சமமாய், கம்பீரமாய் உன் மனமிருக்குந் தன்மை என்ன? இதை நீ சொல்லக்கடவாயென்றுகேட்க, சூடாலை சொல்லுவாள், பிராணநாதரே! அற்பமான ஜகத்தின் வாசனையை நீக்கி மஹத்தான ஒப்பற்ற ஞான ஸ்வரூபத்தைப்பெற்றேன். அதனால் அழகுடையவளாய்ப் பிரகாசிக்கின்றேன். அணுவுக்கணுவாய் உத்பத்தி நாசமில்லாததாய் மிஞ்சுகிறதெதுவோ அதைத்தெரிந்துக்கொண்டேன். போகங்களை யனுபவியாமலிருந்தும் அனுபவித்தது

போலத் தோன்றச்செய்து இராகத் துவேஷங்களை விட்டேன். சாஸ்திர திருஷ்டியில் சுகிக்கின்றேன். சங்கற்பங்களனைத்திற்கும் ஸ்வயம் பிரகாசமான தெய்வமாய் வியாபகமான வென் ஆத்மாவில் ரமிப்பேன். திரளான விச்சகலத்தையும் விட்டேன். விலக்ஷணவஸ்துவைப் பூரணமாகப்பெற்றேன். கண்களாலும் கருத்தாலும் இவ்விடத்தி லெதைப்பார்ப்பேனோ அவைகளை நண்ணாமல் அவைகட்கு வேறாய் அற்பமாகாதிருப்பதை யுள்ளத்திற் சுகமாகப்பார்ப்பேனதலால் அழகையுடையவளானே னென்றாள். அதைக்கேட்டவரசன் சொல்லுவான். ஏ பெண்ணே தகாதவசனத்தைக்கூறினாய். அறிவில்லாதவளைப்போல மயங்குகின்றாய், மேலான வரசச்செல்வத்தில் விளங்குகின்ற நீ ஆத்மாவி லெப்படி விளங்குவாய்? ஜகத்தை முழுமையும் விட்டு, பூரண வஸ்துவையடைந்த சத்துக்கள் பிரத்தியக்ஷமாகக் காணுமதனை நீ யெப்படி அனுபவிப்பாய்? அனுபவியாத போகத்தில் அகமகிழ்ச்சி யுடையேனென்று அப்போகத்தை நீக்கிவிடும் தரித்திரரைப்போல அபாக்கியவான்க ளெப்படி சுகமுடன் விளங்குவர்? ஜகத்தைப் பார்க்கிலோம். வேறே ஆத்மாவை பார்ப்போமென்று சொல்பவர்கள் இவ்வசனத்திற்கு வேறுபடாமல் அவர் விளங்குவதெப்படி? ஆதலால் பேதமை யுடையவளே! அறிவில்லாதவளாயும் சஞ்சலமுள்ளவளாயும் பலவசனங்களினாலும் சந்தோஷிக்கின்றாயென்று சொல்லி வெளிப்படச்சிரித்து அரசனவன் வேறோரிடத்திற்குச் சென்றான். சூடாலை அரசனறியாமைக் கிரக்கமுற்று ஆத்மஞானத்தில் விஸ்ராந்தியடைந்திருந்தாள்.

பின்பு அரசனும் சூடாலையும் முன்பிருந்தாப்போல் வேற்றுமையில்லாமல் வெகுகாலஞ் சுகித்தார்கள். இவள் மேலான வமைதியுடையவளாய் ஆசையென்பது சற்று மில்லாதிருந்தும் ஆகாய கமனம் முதலாகிய சித்திகளை அடையவேண்டி சகலத்தையும்விட்டு ஏகாந்த ஸ்தானத்தில் சுகாசனமுடனிருந்து பிராண *வாயுவை நேரே மேல்நோக்கும்படியாக வெகுநாள் பழக்கஞ்செய்துவந்தாள்.

*(பஞ்சப்பிராணங்கள் தேவரூபிகளாதலால் அந்த வாயுக்களின் றன்மை யறிந்தடைந்தவர்களுக்கு அவை ஏவலாளிகளைப்போல ஜகத்தை யாளும்படி செய்யும், மோக்ஷத்தைக்கொடுக்கும், சகலசித்திகளை கொடுக்கும். நூறு நாடிகளில் அந்தரவேஷ்ணியெனு மோர்

இந்தப் பழக்கத்தால் ஞாடாலை இரேசக பூரகக் கும்பகக்கிரமத்துடன் பிராணன் நிறைந்த சரீரத்தை யுத்தேசித்து அறிவு மேல் நோக்கியதால் ஆகாயகமனஞ் சித்தித்தது. அப்படியே அணிமா முதலிய அஷ்ட சித்திகளும் அனுகூலங்களாயின.

நாடி குண்டலாகாரமாய் சகல ஜீவர்களிடத்தும் சரீரங்களிலெவ்விடத்துஞ் சஞ்சரிப்பதாயிருக்கும். அதனிடத்தில் குண்டலி யென்றுமோர் சத்தியானது பரிசுத்தமாய் மேலானதாயிருக்கும். அச்சத்தியினிடத்தில் நாடிகள் யாவும் கட்டுண்டிருக்கும். அது சிந்தனையால் கலையாம். ஞானத்தால் ஞானமாம். மனத்தால் மனமாம். அந்த குண்டலினிசக்தி பிராணனான வடிவமாதலின் கீழும் மேலும் வருதலும் போதலுமாயிருக்கும். அதனிடமிருக்கும் போக்குவரவை யொழித்து பிராணவாயுவை தடுத்தலினால் ஜீவர்களுக்கு நோய்வாரா. நோயானது பிராணிகளுக்கு இரண்டுவிதமாயிருக்கும். அதனை ஆதியென்றும் வியாதியென்றுஞ் சொல்லுவார்கள். அந்தக்கரண வாஸனையை ஆதியென்பார்கள். அது அஞ்ஞானத்தால் நாபி மூலத்திலுண்டாயிருக்கும். அதற்குக் காரணம் ஆசை, கோபம், அஹங்காரமேயாம். கோரின வஸ்து கிடைக்கவில்லையே! யென்ற மோஹமே ஆதியின் லக்ஷணம். இது சாரமென்றும், சாமானியமென்றும், இருவகை. உடற்பிணியை சாரமென்பர், ஜனன மெடுப்பதைச் சாமானியமென்பர். இனி வியாதியாவது மிகுந்த ஆசை வெளிபட்டு மூர்க்கபாவனை முற்றும்போது கொடிய விபகாரங்களைச் செய்தலினாலும், பொல்லாத உணவினாலும், கொடிய தேசத்தில் சஞ்சரித்தலினாலும், தீங்கான செய்கைகளாலும், துர்ஜன சங்கத்தாலும் பொல்லாத வெண்ணங்களாலும், கணுக்களுடைய தொளைகள் சிறுத்தல் பெருத்தலாலும், பிராணவாயுவோடி மிகவும் சின்னபின்ன மாகுதலாலும், தேஹத்திற்கு வியாதியுண்டாம். மனக்கலக்கத்தாலாகும் ஆதியினால் வியாதியுண்டாம். அபிமதவஸ்து லபிக்குமாயின் சார ஆதி நீங்கும். ஆத்ம ஞானத்தால் சாமானிய ஆதி தொலையும். மணிமந்திர ஔஷதங்களாலும், மனந் தெளிந்து ஆனந்த மடைதலாலும் வியாதிகள் நசிக்கும்.)

அனந்தரம் ஞாடாலை, தன் நாயகனுக்கு ஆனந்தாமிர்தமாகிய ஞானத்தை பலதந்திரங்களாலறிவித்தும் அனந்தப் பரிசுத்த ஞா

னத்தில் இளைப்பாறிச் சுகிக்கவில்லை. மஹா யோகினியாகிய சூடாலையின் குணங்களை, பாமரர் கல்வியை யறியாததுபோல அரசன் தெரியாதவனா யிருந்தான். அதைப்பற்றி அவளும் தன்னுடைய யோகசம்பத்தைச் சொல்லாதிருந்தாள். பக்குவமாகாமுன் போதனை அரசனுக்கு எட்டவில்லை, இவ்விடத்திலோர் சங்கை யுண்டாயிற்று. அதென்னவெனில், மஹா சித்திகளை யுடைய சூடாலையே, கணவனுக்கு வருந்திச்சொல்லியும் அவன் ஞானத்தை யடைய வில்லை யென்றால் மற்றவர்க ளெப்படித் தெரிந்துக்கொள்ளுவார்களென்னும் சங்கை நேர்ந்தது, அதற்குப் பரிஹாரம் ஆசாரியோபதேசத்தில் நம்பிக்கை வைப்பது நன்மைக்கிடமாம். ஆத்ம ஞானத்திற்குப் பரிசுத்தமான சேஷனறிவு காரணமாகும். எப்படியென்றால் ஒரு வேடன் விந்தியமலைச்சாரலில் பெரிய சம்சாரியா யிருந்தான். அவனொருதினம் புல் நிறைந்த காட்டில் வழிபாதையி லோர் பலகையைப் போட்டுவிட்டு அழுகையுடன் மூன்று நாள் தேடுமளவில் சந்திரனையொத்த ஒரு இரத்தினத்தை எதிரே கண்டான். அதுபோலப் பக்குவ காலத்திற் செய்யும் பிரஹ்மோபதேசத்தினாலும், வேதாந்த சாஸ்திர ஞானத்தாலும், அதினனுஷ்டானத்தாலும் ஞானமுண்டாம். இதனால் சேஷனறிவு முயற்சிக்கும். ஆசிரியர் வாக்கு அதின் பிரயோஜனத்திற்கும் ஹேதுவாகுமென்று கொள்ளத்தக்கது. பின்பு அரசன் ஆத்ம ஞான மில்லாததனால் மோஹமுற்று மேன்மை பொருந்திய சூடாலையின் சாங்கத்திய விசேஷத்தால் செல்வம் பெருங்கனவென்று அறிந்து தானங்க ளநேகமாகச்செய்தும், விரதங்களை யனுஷ்டித்தும், தீர்த்தங்களில முழுகியும் சுகத்தை யடையவில்லை. தீவிர வைராக்கியத்தால் மனம் நொந்து ஒருதினத்தில் தனியே சூடாலை அருகிலிருந்துக்கொண்டு தானடையுந் துயரமெல்லாம் அவளுக்குச் சொல்லத் தொடங்கினன். பெண்ணே! அரசாக்ஷியிலும், அனுபவித்த சம்பத்திலும் இச்சையை விட்டேன். வனத்திற்கேக விரும்புகிறேன. துன்ப வின்பங்களும் ஆபத்து சம்பத்துகளும் ஆரண்ணிய வாசிகளை அணுகா. இவ்விடத்திலிருக்கும் வரைக்கும் உயிர்ச்சார்பு பொருட் சார்புகளின் பற்று நீங்காதிருக்கும். ஆசை யற்று ஏகாந்தத்திலிருக்கும் மனதைப் போல பிரஹ்மேந்திராதிகளும் சந்திர சூரியர்களும் சுகமடையார்கள். ஆதலால் வனத்திற்குப் போகுமென்னை நீ தடுக்க வேண்டாம்.

காவலன் வார்த்தையை குலஸ்திரீகள் தள்ளாரன்றோ? என்றுரைக்க, சூடாலை அரசனை நோக்கி பிராணநாதரே! கிழத்தனத்தால் காயந் தளர்ந்தால் கானகத்திற் கேகலாம், எவ்வன காலத்திற்போவது முறைமையன்று, இவ்விடமிருந்தே சகலத்தியாகஞ் செய்யலாமே என்றாள். அதைக்கேட்டு அரசன் ஓ பெண்ணே! நீ தடைசெய்ய வேண்டாம். நான் வனத்திற்கே செல்வேன். நீ சிறியவளாதலால் என்னுடன் வருவதற்குக் கூடாது. நீ ராஜ்யபாலனம் பண்ணிக்கொண்டு வீட்டிலிருக்கக் கடவாய் என்று சொல்லி நீராடச் சென்றான். பகற்காலம் போனபின்பு சந்தியாவந்தன நியமங்களைச் செய்து மனையாளுடன் பூநிமேல் நித்திரைசெய்து அர்த்த ஜாமத்தில் சூடாலை யுள்ளேயிருக்க மெள்ள வெழுந்து அவளறியாதபடி வெளியே போய் தன்னைத்தெரிந்த வனைவர்களுக்கும் நகர்சோதனையாகச் செல்வோமென்று எல்லோரையும் நிறுத்தி பட்டணத்தினின்று நீங்கி தன் சம்பத்தனைத்திற்கும் ஒருமெண்டஞ் சமர்ப்பித்து நிறுத்திவிட்டு, தான் காட்டிற் பிரவேசித்து பன்னிரண்டு நாளில் அநேக மலை யாறுகளையுங்கடந்து மந்தரமலைக் கருகிற்சென்று தாமரைத் தடாகமும் பூங்காவனமும் சூழ்ந்த வனத்தில் வசித்தான்.

அவ்வனத்திலோர் பன்னகசாலையைச் செய்து ஓர் தண்டமும் கமண்டலமும், ஜபமாலையும், வஸ்திரமும், காய் கனிகள் வைக்கத்தகுந்த பாத்திரங்களும், மிருகசருமத்தையும், சேகரப்படுத்தி மேலான தவத்தைச் செய்யத் தொடங்கி, உதயமான முதற்ஜாமத்தில் சந்தியாவந்தனமும், ஜபமும், இரண்டாம் ஜாமத்தில் புஷ்ப மெடுத்தலும், மூன்றும் ஜாமத்தில் பகவதர்ச்சனையும், நான்காம் ஜாமத்தில் கனி காய்களைப் புசித்தலும், இரவெல்லாம் பகவந் நாமத்தை யனுசந்தித்து இவ்வாறு அவ்வரசன் தவத்தைச் செய்து வந்தான். பட்டணத்தில் சூடாலை தான் படுத்திருந்த அறையில் பாதி ராத்திரியில் விழித்துக்கொண்டு தன் பக்கத்திலிருந்த வரசனைக் காணாதவளாய் துன்பமடைந்து அரசன் செல்வத்தினின்று நீங்கி கானகஞ் சென்றானென்று இரக்கத்துடன் மெலிந்து, 'பர்த்தாவை நீங்கினால் குலப்பெண்களுக்கு வேறே கதியில்லை. ஆதலால் அரசனைக் கூடவேண்டுமென்று சிந்தித்து, பலகணிவாயலால் வெளிப்பட்டு ஆகாயத்திற்சென்று ஒருவனாய்ச் செல்கின்ற அரசனைப் பார்த்து, தனக்குள் சிந்திப்பாள். இனி நாமிப்பொழுது கணவனெதிரே சென்று நிற்போமாயின் விபரீதமான வெண்ணத்திற் கிடம்

கொடுக்கும் ஆசையால் அவர் இனி செய்யப்போகிற காரியங்களை
யெல்லாம் விசார திருஷ்டியினால், பார்க்கவேண்டும். இப்பொ
ழுது நான் அவரைக் காண்கிறது தகுதியல்ல. இராகத்துவேஷ
ங்கள் போனபின் சேருவது நியதிமார்க்கம் 'என்று இவ்வாறுகச்
சிந்தித்துத் திரும்பிப் பழய வழியால் பட்டணம் வந்து, கேட்டவர்
களுக்கு அரசனோர் காரணத்தினால் வெளியே போனாரென்று
சொல்லி அரசநீதியினால் பூமியை சமதிருஷ்டியுடன் தனிமையாக
இரக்ஷித்து வந்தாள்.

சூடாலை பதினெண் வருஷங்களிவ்வண்ணம் ராஜ்ய பரிபால
னஞ்செய்து, பின்பு கணவனிடஞ்செல்ல விது தகுதியான காலமெ
ன்றுநினைத்து ஒரிராத்திரியில் வெளிப்பட்டு ஆகாயத்திற் வாயுவி
ன் றோளிமேலேறி தெரியாமற்சென்று மந்தரகிரியைச் சேர்ந்தாள்.
அங்கு முத்துமாலையும், இரத்தினாபரணங்களு மில்லாமல் கறுத்து
மிளைத்து மிருக்குமோர் சரீரத்தைப் பார்த்து தன் நாயகரென்ற
றியாமல் பின்பு யோக சித்தியினால்பார்க்க, அவன் நாயகரென்
றுணர்ந்து சற்று விசனமுற்று தனக்குள் சொல்லுவாள். ஆஹா!
அறியாமை மிகவுங் கொடியது. அதனால் இவ்வரசன் துன்ப முற்
றார். ஆத்ம ஞானமும் மோக்ஷமும் அடையச் செய்வேன். இத்
தேஹத்துடன் அவருக்கு, கண் காக்ஷியாக நின்றால் நம் வார்த்
தையை நம்பமாட்டார். ஆதலால் வேறோர் தேஹத்தைக்கொ
ண்டு கிரமமாக போதிப்பேன். பக்குவமான பர்வமானால் இந்த
நிர்மலமனதில் ஞானம் பொருந்தும். இது தகுந்த காலமென்றெ
ண்ணி ஒரு பிராம்மண குமாரனாய் ஆகாயத்திலிருந்து வந்து தன்
கணவன் முன்னிறங்கினாள். அவ்வரசன் பார்த்து சீக்கிரத்தி லெ
ழுந்து, வந்தன வழிபாடுகளைச் செய்தான். ஸ்வர்ண மயமான
வடிவும், வெண்மையான முத்துமாலையும், வெள்ளை வஸ்திரமும்
வெண் பூணூலையுடைய வப்பிராமணச் சிறுவன் பூமிக்குமேல் அந்
தரத்தில் நிற்பதைக் கண்டு அரசன் ஆசனமளித்து ஸ்வாமி! தேவ
ரெழுந்தருளக் கடவீரென்றான். அச்சிறுவனும் ஓ ராஜரிஷியே!
உம்மை வணங்கினேனென்று ஆசனத்தி லிருந்தவளவில் அரசன்
சொல்லுவான் தேவரீர் வரவால் மேன்மையான பிரயோஜனத்தை
யடைந்தேனென்று பலவித பூஜைகளைச்செய்து தன திஷ்டதே
வதை யென்று நினைத்தான். அவ்வந்தணப்பிள்ளையு மரசனை நோ
க்கி உமது குணமும் வினயமும் யாரடையப் போகின்றார்? வெகு

காலம் வாழுக்கடவீர், கற்பனைகளற்ற உபசாந்தமுள்ள மனதினால் மோக்ஷமடைய அரியதவத்தைச் செய்தீரோ? இராஜ்யத்தை விட்டு வனத்தை மேன்மையென்று நினைத்து இவ்விடஞ் செய்யுந் தவம் கத்திமுனையிற் செய்யுந் தவத்திற்கொப்பாமென்று சொல்ல, அரசன் சொல்லுவான்; என்னுடைய நிலைமை யாவையும் தேவரீர் கடவுளாதலா லறிந்தீர். நீர் யாருடைய புத்திரர்? உமது நாமமென்ன? இங்கு வந்த காரியமென்ன? இவைகளைச் சொல்ல வேண்டுமென்று கேட்க, அந்தணன் சொல்லலுற்றான்.

நாரத னென்றோ ரந்தணர் ஞானநிலைமை யுடையவராகி கங்காதீரத்தில் சமாதி சாதனைத்தி லிருந்தார். அந்த நிஷ்டை சற்று நேரம் நீங்கி இருக்கிற சமயத்தில் ஜலக்கிரீடையின் ஒலியைக்கேட்டு அத்திசையை நோக்க, சிலதேவதாஸ்திரீகள் புருஷர்களை சமீபத்திற் காணுதபடியால் வஸ்திரமில்லாமல் ஜலத்தில் விளையாடிக்கொண்டிருந்ததைக் கண்டார். அதைக் கண்டவுடன் மனது தாவிக்கொண்டு விவேகத்தை விட்டு சுகத்தையடைய பிராண னலைந்து நிற்க, மனது நழுவுதலால் இந்திரிய ஸ்கலித முண்டாயிற்று. அதனைப் பளிங்கு கடத்தில்விட்டு பாலை அதில் நிறைப்பினர். பாற்கடலில் சந்திரன் வளர்ந்ததுபோல கருப்பமானது வளர்ந்து சிறப்புற்றுக் கடத்திலிருந்து வெளியில் வந்த புத்திரனாகிய எனக்கு வித்தை என்கிற சம்பத்தைக் கொடுத்து, என்னைப் பிரம்மதேவனிடத்திற் கொண்டுபோக, அவர் தத்துவஞானத்தை யெனக்குத் தெரிவித்தார். கும்பத்தில் நான் பிறந்ததனால் அந்தப் பிதாமகனால் நான் கும்பமுனியென்ற ஓர் நாமத்தை யடைந்தேன். சரஸ்வதி யெனக்குத் தாயாவாள், காயத்திரி சிறிய தாயாராவாள். நான்கு வேதங்களென்கிற சினேகிதர்களோடு லீலை செய்துக் கொண்டு வந்தேனென்று தனது ஞானனுபவ அர்த்த விசேஷத்தை யோர் கட்டுக்கதையாகக் கும்பமுனி சொன்னார். அரசன் அவரை நோக்கி, ஆசாரியரே! உம்மைத் தரிசனஞ்செய்தேன், அடையவேண்டிய லாபமனைத்தையும் பெற்றேனென்று சொல்ல, கும்பமுனி அரசனைநோக்கி, ஐயா! உமக்கு முன் என் வரலாற்றைச்சொன்னேன். நீரார்? இங்கென்னசெய்கின்றீர் என்று முனியானவர் கேட்க, அரசன் அச்சிறுவனைநோக்கி ஸ்வாமி! பவத்தின்பத்திற்கு மனதுபயந்ததனால் கானகம் புகுந்தேன். எனது நாமம் சிகித்துவஜனென் றுரைப்பர். பட்டணத்தில் அரசாக்ஷிசெய்யுந்

தன்மையை இகழ்ந்து இவ்விடத்திலிருக்கின்றேன் ஜனனதுக்கத்தைக் கண்டு ஓயாமல் தவிக்கின்றேன். தவத்தொழிலுக்கு வேண்டியவற்றைச் சம்பாதித்துத் தவத்தை நடத்தியும் துன்பத்தை நீக்கி பின்னும் துன்பத்தையே யடைந்தேன். ஓ முனிவரே! அமுதம், நஞ்சானது போல் காண்கிறதே! இதை யறிகிலேனென்று விடைகொடுக்க, கும்பமுனி அரசனைப்பார்த்து, ஓ தராதிபரே! ஆசாரிய ரறிவிக்கும் ஞானமானது அநுபவத்திற்கு வந்தால் சுகமுண்டாம். தவத்தொழில், காலத்தைக்கழிக்கின்ற விளையாட்டல்லவோ? ஞானமில்லாதவர்க்கெல்லாம் கிரியையே கதியாம். அவை சொர்க்காதிபலனைக் கொடுக்கும். அசுத்தவாசனை கெட்டால் கிரியாப்பிரயோஜனமுமொழிந்துவிடும். யாவும் பிரம்மமென்கிற பாவனையால் அஞ்ஞானம் நீங்கும், பின்பு அசுத்தவாசனை யுண்டாகாது. வாசனையனைத்தையும் விட்டால் ஜராமரணங்களில்லாத பரமபதமுண்டாம். வாசனையுடன் சேர்ந்த மனது, வேற்றுமையான வஞ்ஞானமேயாம். வாசனை நீங்கிய மனது பிறப்புக்குக் காரணமாகாத ஞானமாம். ஞானத்தால் ஆத்மாவையறிந்து, பகவதநுபவத்தைப் பெற்றால் ஜனனமுண்டாகாது. ஞானமே மிகவும் நல்லதென்று பிரமதேவன் முதலானோர் சொல்லியிருக்க, நீரேன் அதனை விரும்பவில்லை? நான் யார்? இவ்வுலகமெப்படி யுண்டாயிற்று? இது எவ்விடத்திலிருக்குமென்று நினையாதிருந்ததென்ன? அறிவில்லாதவர்கள் போல ஏன் தளர்கின்றீர்? மேலான ஆசாரியரை வணங்கி பந்தமோக்ஷமெவ்வண்ணமென்று ஏன் அறிந்திலீர்? பூரணஞானத்தால் சமதிருஷ்டியை யடைந்த சத்துக்களைச் சேவித்து அவர்களை விசாரித்தால் முத்தியடையும் சூக்ஷ்மஞானம் கிடைக்கும் என்று சொன்னார். அதைக்கேட்டு அரசன் தன் கண்களில் ஜலம் பெருக இரக்கமுடையவனாய்க் கும்பமுனியைநோக்கி, ஆசாரியரே! ஏழையான நான் தேவரீரால் உணர்வை யடைந்தேன். அறியாத்தன்மையால் அறிஞருடைய சேவையைவிட்டு இந்தத்தனிமையான காட்டில் வந்தேன். தேவரீர் இவ்விடம்வந்து அடியேனைச் சந்தித்து உணர்த்தினீராதலால் ஆசாரியர் நீர்தான். தந்தையும் நீரே. சிநேகிதரும் நீரே. அடியேன் சிஷனாயும்மை வணங்கினேன், கிருபை செய்யவேண்டும். உதாரமுள்ள வுணர்வையடைந்து துன்பங்களைப்போக்கி எந்தச் சதானந்த வஸ்துவை நீர் பெற்றீரோ அதை எனக்குச்சொல்லுவீர். தேவரீர் பிரமதேவ

னுக்குச் சமானரென்று சொன்னான். கும்பமுனி அரசனைப்பார்த்து, ஓ அரசனே! நான் சொல்லுவதைநீர் ஏகமனதுடன் கேட்பீரேல் உமக்கு ஞானத்தை போதிப்பேன். சொன்னதை கிரகிக்காமல் விநோதத்தால் கேட்குமவர்களுக்கு அதுபிரயோஜனத்தைக் கொடாது. இருட்டில் கண்களுக்கு உணர்வுமுண்டாமோ? என்று சொல்ல, அரசன் ஸ்வாமி! தேவரீரருளால் இவ்விட முரைக்கும் வாக்கியங்களனைத்தும் வேதநியமமென்று வுண்மையாகக் கிரகித்து செம்மையாகச் சிந்திப்பேனென்ன, கும்பமுனி அவனைநோக்கி ஒன்றுமறியாப் பாலகனுக்கு பிதா சொல்லுவதைப்போல நானுமக்குச் சொல்லும் வசனத்தைத் தடுத்துக் கேளாமல் நன்மையென்று நினைக்கக்கடவீர்.

ஓ அரசனே! இவ்விஷயத்திலோர் கதை சொல்லுகிறேன் கேளும். முற்காலத்திலொரு தனவான் கலைஞானங்கள் முதலிய சகல சாஸ்திரங்களிலும் வல்லமையுடையனாய் ஆத்மஞானமில்லாதிருந்தான். அவன் சிந்தாமணியைப் பெறவிரும்பி அதற்காக எங்குந்தேடியு மகப்படாமல் வருத்தமுற்று தவத்தாலாவது அதனையடையவேண்டுமென்று முயற்சிசெய்து சிலநாள் தவத்தில் நின்றான். அதற்கு பிரயோஜனமாக அம்மணி கண்ணெதிரிற் றோற்றி சந்திரன்போல பிரகாசிக்கவும் அதனை கைவசப்படுத்தாமல் இது சிந்தாமணியல்ல, வேறேயொரு அற்பமணியாகும், அந்தமணி வெகுநாள் வருத்தப்பட்டு மெலியுங்காலத்திலன்றோ கிடைக்கும்? பாலகருக்குக் கிடைக்குமா? நானோ மனிதன், எனது தவமோ சொல்பம். வல்லமை எனக்கு கொஞ்சமுமில்லை. தரித்திரமுள்ளவன். இப்படிப்பட்ட வெனக்கு காணற்கரிய மணி எளிதாக முன்னே தோற்றுமா? இன்னமுந் தேடுவோமென்று அந்த சிந்தாமணியை யெடுக்கவில்லை. அம்மணியும் போய்விட்டது. தீயவர்களுக்கு நன்மையுண்டாமோ? திரும்பி வருத்தத்துடன் தேடினான். சிலநாள் கழிய சித்தர்கணங்களவனை பரிஹாசஞ் செய்யும்பொருட்டு உடைந்த வளையல் துண்டை அவனெதிரே யிருக்கச்செய்ய, அதனைக்கண்டு சிந்தாமணியென்று சந்தோஷித்து கைக்கொண்டு அது சகல செல்வத்தையுங் கொடுக்குமென்றெண்ணி தன்னிடமிருந்த பொருள்களனைத்தையும் நீக்கித் தானிருந்த தேசம் கொடுமையுடையதென்று நீங்கி கானகத்திலிருந்து சுகிப்போமென்று காச்சு கல்லினால் துன்பமுற்று தாழ்வை யடைந்தான்.

மற்றொரு கதையைச் சொல்லுகிறேன் கேளும். விந்திய பர்வதத்தின் சார்பிலிருக்கும் வனத்தில் ஒரு பெரிய யானை மேன்மை பொருந்தி யிருந்தது. அதற்கு வஜ்ராயுதத்திற் கொப்பான தந்தங்களிருந்தன. அதனை யொரு மாவுத்தன் (யானைப்பாகன்) வசப்படுத்திக்கொண்டு இரும்பு சங்கிலியினால் கட்டி விலங்கிட்டான். அதனாலது மனஞ்சோர்ந்து நெருக்கிவைத்த கட்டுகளனைத்தையும் ஓரிரண்டு முகூர்த்தத்தில் இரண்டு தந்தங்களினாலும் கெடுத்தது, மாவுத்தனிதைக்கண்டு பனைமரத்திலிருந்து யானை மத்தகத்திற் குதித்துத் தவறி பூமிமேல் விழுந்தான். இதைக்கண்ட யானையானது கருணையால் கொல்லாமல் நீங்க, பின்பந்தமாவுத்தன் திரும்பியுமெழுந்து தணியாத கோபத்துடன் அந்த யானையைத் தேடிச் சென்றான். ஒரு காட்டினடுவில் அதைப்பார்த்து குழியொன்றுண்டாக்கி உலர்ந்த இலைகளினாலும் கொடிகளினாலும் அதனை மறைவு செய்து வைத்தான். யானை சிறிதுநாட் சஞ்சரித்து அவ்விடத்தில் வருகிற காலத்தில் படுகுழியில் விழுந்தது. அந்த மாவுத்தன் வந்து அதை அழுந்தக்கட்டித் தன்வீட்டிற் கதைக் கொண்டுபோய் காவலில் வைத்துக்கொண்டான். முன்பு தன்முன்னே விழுந்த சத்துருவாகிய மாவுத்தனை தலைமூளை சிதறும்படி கொன்றிருந்தால் கானகத்தில கொடிய படுகுழியில் கட்டுண்டு கலங்க வேண்டியதில்லையே! அதைப்போல வர்த்தமான காலத்தில் இனிவரும் காலத்திற்காகிய காரியங்களை பாராதவர்கள துன்பத்தை யடைவார்கள்.

இவ்விரண்டு கதைகளை சிகித்துவஜன் கேட்டு கும்பமுனியை நோக்கி எனதப்பிதாவே! சிந்தாமணியாலும் யானையினாலும் நடந்த விருத்தாந்தங்களின் கருத்தை யறிவிப்பீரென்று கேட்க, கும்பமுனி சொல்லுவார். சாஸ்திரார்த்தங்கள் சகலமுமுணர்ந்து நன்மையான தத்வஞ்ஞான மில்லாதவன் சிந்தாமணியைத்தேடினவனும், அது வுமக்கே திருஷ்டாந்தம். நீர் எல்லா நூல்களையுங்கற்றுணர்ந்தும் உபசாந்தத்தை யடையாதிருக்கிறீர். சிந்தாமணி யென்பது சகலத்தியாகமாம். அந்த சகலத்தியாகத்தைத் தேட முயற்சித்து அரசாக்ஷியை விட்டீர். இல்லாளையும் உறவினர்களையும் விட்டீர். சகலத்தியாகம் நிறைவேறுகிற சமயத்தில் விகற்பம் மனதில் வளர்ந்து வும்மை மறைக்க அது தவிர்ந்து போக, இக்காட்டிற்கு வந்தீர் அதனால் காச்சுக்கல்லை உணர்வில்லாத

விகற்பதிருஷ்டியினால் பார்த்து அது நன்மையென்று துன்பப்படு
கிறீர். கிடைத்த சுகத்தைத்தள்ளி அற்பவின்பத்தில் மனதை
செலுத்தினவரே ஆத்மாவைக் கொன்றவர்களென்றும் வஞ்சகரெ
ன்றும் சத்துக்கள் சொல்லுவார்கள். சிந்தாமணி கிடைத்ததெ
ன்று நீயெண்ணிய சுவத்தால் தளர்வு நீங்கவில்லை, பிரயோஜனத்தை
யு மடையவில்லை. இனி யானையின் வரலாற்றைக் கேட்பீர்
யானையென்பது உம்மையே குறித்தது. வைராக்கிய விவேகங்கள்
அதனுடைய தந்தங்கள். அறியாமையான உமது குணங்களே
மாவுத்தனாகும். உம்மை மெலிவுசெய்கின்றது அஞ்ஞானமேயாகும்
அதனாலுண்டான துன்பங்களினால் யானையைப்போல் சிதறுகின்
றீர். இரும்புசங்கிலி யென்கிறதென்பது ஆசாபாசங்களாம். இவை
யால் நீர் கட்டுண்டீர். இரும்புசங்கிலி, காலாந்தரத்தில் தேய்ந்
தொழியும். இச்சையானது, மேலும் மேலும் உறுதியாக வளரும்.
யானை, இரும்புசங்கிலியை முன்னே முறித்ததென்றது, நீர் இஹ
லோகபோகங்களை முன்னமே வெறுத்தவிதமாகும். மாவுத்தன்
யானைமரத்தினின்று விழுந்ததென்பது, உமது விரக்தியினால் அஞ்ஞா
னம் மழுங்கியதாகும். நீர் சகலத்தியாகமெனும் வாளினால் அவ்வ
ஞ்ஞானத்தைக் கொல்லவில்லை யாதலால் திரும்பி வளர்ந்தது.
அறியாமையினால் மிகவும் வருந்தினீர். படுகுழியென்பது, காமி
யத்துவம், இவ்விதமாக நீர் துன்பத்தையடைந்து, மாவலி சிறை
யிலடைப்பட்டு பாதாளத்தி லிருப்பதைப்போல இருக்கின்றீர்.
தவறாத வாசனைத்தையுடைய சூடாலை உமக்குப்பட்டணத்திலிருக்கும்
பொழுது சொன்ன ஞானவழியின்படி ஏன் சகலத்தியாகத்தைச்
செய்யவில்லையென்று கும்பமுனி கேட்க, அரசன் ஸ்வாமி! என்
பூமியையும், அரண்மனையையும், செல்வத்தையும், மனைவியையும்
விட்டேன். சகலத்தியாகமானது இவைகளை விடுகையன்றி வேறே
யாது? என்று கேட்டான். கும்பமுனி யதற்கு அரசனைநோக்கி,
ஐயா! நீர் நாடுநகரத்தை விட்டாலும் சகலத்தியாகமாகாது. சகல
த்திலு முமக்குப்பற்றுண்டு. அவ்விச்சையைவிட்டு ஆனந்தமடை
வாயென்று சொல்ல, அரசன் நாடுநகரங்களை விட்டது சகலத்தியா
கமல்லவானால், மலைமரங்களும் நிறைந்தகாட்டையும் விட்டேனாத
லால் சகலத்தியாகஞ்செய்தேனென்றுசொல்ல, கும்பமுனி காட்
டைவிடினும் சகலத்தியாகமாகாது. உமக்குத்துன்பத்தைக்கொடு
க்கும் பற்று இருக்கிறது, அது நீங்கினால் சுகமடைவீரென்று சொ

ன்றார். அதற்கு அரசன், இதுவுமல்லவானால் வஸ்திரம், தண்டம், ஜபமாலை, மான்தோல், மண்பாத்திரங்களெனக்கிருக்கின்றன இவைகளை விடுகிறேனென்று அவைகளை அக்கினியிற் கொளுத்தி மனமகிழ்ந்து வேறுருவமாய் ஆசையில்லாதவனானேன் தேவகுமாரரான உம்மால் அறிவைப்பெற்றேன் ஆஹா! துன்பத்தினின்று நீங்கினேன் கேவலமானேன் களங்கமொழிந்தேன் சகலத்தையும் நீக்கினேன், பொருள்களின் வாசனை எவ்வளவெவ்வளவு நீங்குமோ அவ்வளவவ்வளவு தெளிவுள்ள மனமானது சுகமடையும். வாசனையைஜெயித்தே அச்சுகத்தைப்பெற்றேன். பந்தங்களைப் போக்கினேன், திகம்பரனைப் தேவரீர் கிருபைசெய்யாநின்ற சகலத் தியாகத்தைப் பெற்றேன், வேறென்ன விருக்கின்றன வென்றரசன்கேட்டான். கும்பமுனி சொல்லுவார். நீர் ஒன்றையாவது நீக்கவில்லை. உமது கொண்டாட்டம் வீணென்று சொல்ல, அரசன் மனதிற் சிந்தித்து திரும்பவுஞ் சொல்லுவான். பஞ்சேந்திரியங்களென்னும் பாம்புகள் சேர்ந்திருக்கிற வெள்ளை யெலும்புகளும் மாம்சமுமான வுடலமே அடியேனுக் கிவ்விடத்தில் மிஞ்சினது, இதனை சுலுவில் நீக்குகின்றேன் பார்ப்பீரென்று ஓர் மலைமேலேறி அரசன் கீழ்விழுகின்ற சமயத்தில் கும்பமுனி அரசனைப்பார்த்து இவ்விடத்திலென்ன காரியம் செய்கின்றீர்? இந்த உடல் உமக்கென்ன குறைசெய்தது? இறந்துபோனால் பிரயோஜனமென்ன? பசுங்கன்றை வல்லெருது கோபிப்பதைப்போல மலையைத்தாண்டிக்குதித்துச் சரீரத்தை விட்டாலும் சகலத்தியாகமாமோ?

எதினால் சரீரஞ்சஞ்சரிக்கிறதோ, எது ஜனன கருமத்திற்கு வித்தாய் நின்றதோ அதை விடுவையாயின் எல்லாம் விட்டனவாமென்ன, அரசன் சரீரத்தை அசைத்து ஜனன பீஜமாகியவிதையெது? அதனை நீக்குவதெப்படி? யென்ன, கும்பமுனி சகலத்திலும் சார்ந்தசுகமாய் ஜீவன் பிராணனெனும் நாமங்களனேகங்களைப்பெற்று ஜடமும் அஜடமுமல்லாததாய் வியாபகமான சித்தத்தை சகலமென்று சொல்லுவார்கள். ஜகமுமிதுவே, பந்தமுமிதுவேயாகி மரத்தை அசைக்கும் வாயுவைப்போல சித்தமும் சரீரத்தை ஆட்டிவைப்பதாகும். இம்மனதைவிடுவதே சகலத்தியாகமாகும். அதேபரமானந்தம். மற்றவை யாவுந்துன்பமே. இந்த ஸகலத்தியாகத்தைச்செய்து உபசாந்தமுடையவனாய் மச்சரமின்றி இயல்பான ஞானத்தினால் தெளிவடைந்தால் ஆத்மவஸ்து

னீயோவாய் என்ன, அரசன் சொல்லுவான். தேவரீர் சொல்லிய மனதிற்கு முதல்வடிவமெது? அதை நானெப்படி தீர்ப்பதென்று கேட்க, கும்பமுனி சொல்லுவார். மனதிற்கு வாசனையே யுருவாம், மனமெனும் பேர் வாசனையின் பரியாயநாமமாம். நானெனும் அஹங்காரமே மனமென்னும் விருக்ஷத்திற்கு விதையாகும். புத்தியே அதின் முளையாம். மனமும் சித்தமு மதின் கிளைகளாம். ஆனதால் இவையாவும் அஹங்காரத்தின் பேர்களாம். வினையையுடைய வாசனையின் கிளைகள் வெகுகாய்களைக் காய்க்கும். ஞானமெனும் வாளால் வெட்டினால் மாய்ந்துபோம். அச்செடியின் கிளைகளை வெட்டுவது கௌணமென்பர். அதன் வேரை அறுப்பது முக்கியமென்பர். ஆதலால் மிகுந்த நன்னெறியால் அந்த விருக்ஷமூலத்தை நீர் அறுத்துச் சுட்டால் மனமுண்டாகாதென்று சொல்ல, அரசன் கேட்டு அவ்விருக்ஷத்தின் பீஜமாகிய அஹம்பாவத்தை சுடத்தக்க அக்கினியேதென்ன, கும்பமுனி யுரைப்பார். நானார்? என்கிற பொதுவிசாரணைதானே மனோபீஜத்தை கெடுக்கின்ற அக்கினியென்றார்.

அரசன் பின்பு தன்னிற்றான் விசாரித்து அனுபவமாகக்கண்டதை விளம்பலுற்றான். பலவிதமாகச் சிந்தித்துப் பார்த்ததில் இந்த மலவுடல் நானன்று, இந்திரியங்களும் நானன்று, மனமும் நானன்று, புத்தியும் நானன்று, அஹங்காரமுநானன்று, என்றரசன் சொல்ல, இவைகள் நீ அல்லவாயின் நீ வேறெ யார் சொல்வாயென்று கும்பமுனி கேட்க, அரசனவரை நோக்கி அறிவாகிய சித்துருவா மென்னுடைய சொரூபம். இந்த (ஸ்வ) ஞானத்திற்கொரு வேறுதலைக் காண்கிலேன், மனோவிருக்ஷத்தின் பீஜமாகிய அஹங்காரத்தைப் போக்குகிற வழியறியேன், போக்கப்போக்க ஓடிவருகின்றது. இதனால் மனந்தளர்கிறேனென்றரசன் சொல்ல. கும்பமுனி சொல்லுவார். காரணத்தை அன்றியோர் காரியமுண்டாகமாட்டாது. அஹம்பாவத்தின் காரணத்தைப்பார்த்து சொல்லுவாயென்று வினவ, திரும்பியும் அரசன் சொல்லலுற்றான், அஹங்காரத்திற்குக் காரணம் ஜீவஅறிவாம். (ஸ்வஞானமல்லது சிதாபாசஞானம்) அந்தவறிவு இவ்விடத்தில் லயிக்கும்விதமெப்படி? திருஸ்யத்தில் போதமுண்டாவதனால் இளைக்கின்றேன், காண்பவற்றை விடுவதெப்படியோ சொல்லுமென்ன, கும்பமுனி சொல்லுவார். அவ்வறிவுண்டாகுங் காரணத்தை நீர் சொன்னால் பின்பு

விளங்கும் காரணத்தையும் அகாரணத்தையும் உமக்கு நான் சொல்லுவேனென்ன, மன்னனுரைப்பான், சரீரம் முதலாகிய வஸ்துக்களிருப்பதனால் அறிவு உண்டாகிறது. அவை பொய்யானாலில்லை. அஹங்காரமென்னும் மனதின் வித்தும் அடங்கிவிடுமென்றரசன் சொல்ல, முனிவருரைப்பார். சரீரம் முதலாகிய வஸ்துக்களிருந்தால் ஜீவவறிவுண்டாம். உடல்முதலானவை யில்லாதபோது அவ்வறிவு எப்படி இருக்கிறதோ சொல்லுமென்று கேட்க அரசன் சொல்வான். கை, கால், அங்கமுதலாகியதுகளால் செய்யப்பட்டு கருமபலமுள்ளதாய் அனுபவிக்கப்பட்ட சரீரமானது இல்லையென்கிறதெப்படியென்றரசன் கேட்க கும்பமுனி சொல்லுவார். கருமத்தினாலுள்ள விச்சரீரம் காரணத்தைப் பொருந்தாததனால் ஜீவவறிவெனுங் காரியமில்லையாம், அந்த அறிவு பிரமையாம். பிரமையினால் வரப்பட்டனவெல்லாம் இல்லாதனவாம். காரணமில்லாமல் வரப்பட்ட வஸ்துக்கள் கயிற்றில்வரும் சர்ப்பத்தைப்போல மித்தையாமென்ன, அரசன் இந்த ஜகத்து ஆதிமுதலுள்ள பிரம்மதேவன் உண்டாக்கிய பலசிருஷ்டியாகியிருக்கிறதே! அந்த பிரம்மா இதற்கேன் காரணமாகானென்றுகேட்க, முனிசொல்லுவார். சிருஷ்டிக்குமுன்னே கேவலமாய் உபசாந்தமாகிய பிரம்மசொரூபமே சத்தாய்ப் பிரகாசித்தது. அவ்வொன்றைத்தவிர இரண்டில்லாக்காரணத்தால் பிரம்மாவும் காரணத்தை யடையானென்று சொல்ல, அரசன் மேலான பிரம்மமானது சதுர்முகனுக்குக் காரணமன்றோவென்ன, முனி சொல்லுவார். கேவலமாகியும், அச்சுதமாகியும் அநந்தமாகியும், சாந்தமாகியும், சத்தாமாத்திரமாகியும் இறத்தல் பிறத்தல் துன்பம் தோற்றம் எப்பொழுதுமில்லாமல் பாவனையற்று அடிமுடியற்று ஒன்றாய் தன்னிலிறைந்து சொல்லவரிதாய் நாடவரிதாய்ப் பரமாத்மஸ்வரூபமிருக்கும். அது எப்படி காரணமாம்? அது கர்த்தா போக்தாவாகும் விதமெப்படி? அது வினைவித்து ஒன்றைச்செய்ததில்லை. இந்த ஜகத் விகாரமில்லை, சித்துமாத்திரமேயிருப்பது. அதினுடைய சங்கற்பமே சதுர்முகனும், உண்மையாக ஞானத்தைத்தவிர வேறொன்றில்லை, ஞானமாத்திரத்திலுண்டான சிருஷ்டி அந்த ஞானமே சொரூபமென்று சொல்லப்படும். இவ்விடமுள்ள சகலமும் பிரம்மமே யாதலால் கர்த்தாவும் போக்தாவும் இல்லை. உறுதியாக நிச்சயஞ்செய்து அகத்திலுள்ள வஞ்ஞானத்தைப் போக்கடித்தால் அறியாமை அழிந்ததேயாம்.

கருமநாசத்திலல்லாமல் மோகம் போகாது, அஞ்ஞானமானது நசிக்கில் ஆதிபதம் அமையும். முதற்கடவுளான பரமாத்மா வியாபகமாகிய தனது ஞானத்தினால் சங்கற்பரூபமான சிருஷ்டியைச்செய்வர். ஆத்தும தத்துவமாகியவதனாலே பிரம்மாவென்று சொல்லப்படுவது. எல்லாமாய் காணப்பட்ட விஜ்ஜுகங்கள் உபசாந்த சொரூபமேயாகுமென்றுசொன்னார். அரசன் அவ்வுபதேசமனைத்தையும் கேட்டு நீர் சொன்னயாவுமொக்குமென்றும் ஆதியில் சிருஷ்டிப்பவனில்லாததினால் ஜகமில்லை, அதினால் பலபதார்த்தத் திருஷ்டியில்லையென்றும் இவ்விதமான தோற்றத்தால் நன்றாயறிந்தேன். ஆத்மசொரூபமானேன், மற்றொன்றுந் தெரியக்காணேனென்றுசொல்லி இந்த ஞானத்தினால் சிந்தனையற்ற உபசாந்தமாகி ஆகாயத்தைப்போல நிற்கின்றேனென்று அரசன் சொல்லவுங் கும்பமுனி சொல்வார். தேசம் காலம் திக்குகளும் மனச்செயல்களுமிவையெல்லாவற்றையும் பார்ப்பது உலகத்தைப் பகுத்துப்பார்ப்பதாம். அது வெகுகாலமாயுள்ள பழக்கமாதலால் சிலநாளில் விட்டுப்போம். சாந்தத்தை யுடைய அறிவற்ற ஆத்மா அவ்விடத்தில் தனிமையாயிருக்குமென்று கும்பமுனி சொல்ல, அரசன் ஞானத்தையடைந்து மிகவும் பிரகாசித்திருந்தான். மாயையின் குகையிலிருந்து வெளிப்பட்டான். கற்பனை நீங்கும்படி ஆசாரியனருள் செய்ததைக் கருதி தன்னிலையில்நின்று மனதுங் கண்ணும் ஒருமிக்க, சொல்லற்று சொரூப சுபாவமாக நின்றான். ஒருமுகூர்த்தமிவ்வண்ணமிருந்து விழித்தவுடன் கும்பமுனி சொல்லுவார். நிர்மலமாய் நிர்விகற்பங்களுக்கெல்லாம் நிலையாகியுமிருக்கிற செல்வமிருந்த இப்பதத்தில் ஆனந்தமாகி துக்கம் நீங்கினீரோ? ஆத்மஞானத்தில் தெளிவையடைந்தீரோ? பிரமை நீங்கினீரோ? பார்க்கவேண்டியதைப்பார்த்தீரோ வென்று கேட்டார். அதற்கு அரசன், பகவானே! உமது கிருபையினால் மகாசம்பத்தாகிய வின்பத்தினால் மேலானதை யறிந்தேன். அஹா! ஞானத்தைப்பெற்ற மஹாத்மாக்களின் கூட்டங்களை யடைந்தால் தெளிவானவமுதமாம் பேரானந்தத்தை நிறையப்பெறலாமல்லவா? உமது சங்கத்தால் ஒருபொழுதும் கிடைக்கவரியதான பராமுதத்தை அடையப்பெற்றேன். அளவில்லாத விந்தவமுதம் பூர்வத்தில் அரியதாயிருந்ததென்னவென்று கேட்க கும்பமுனி சொல்லுவார். போகத்திற் கசப்புவந்து இந்திரியங்களகத்திற்றிரும்பி மனவஞ்ஞானம் நசித்தபோதே சிஷனு

டைய மனதில் மேன்மையான சற்குருவாக்கியம் கலந்து நன்மை செய்யும். தேஹமலங்களும் விருக்ஷத்தினுடைய கனிகளைப்போல நழுவிப்போகும். மனதில் இரண்டென்றும் ஒன்றென்றும் நினைத்தலே அஞ்ஞானம். இவ்விரண்டு நீங்கி அனன்னியமாயிருத்தலே ஞானமாகும். பரகதியுமதுவே. நீர் தெளிந்து முத்தி சேர்ந்தீர். மனதையுந் தவிர்த்தீர், ஞானசம்பத்தையுடையவருகி களங்கத்தை விட்டு மௌனியாய்த் தனித்திருப்பீரென்று சொல்லவும், அரசன் அவரை நோக்கி ஜீவன் முத்தர்கள் கொள்ளப்படுஞ் செயல்களைத்தும் மனதினாலல்லவா? மனதைவிட்டு நடக்குந்தன்மை யெதுவென்று கேட்கக் கும்பமுனி சொல்லுவார். மனமென்று சொல்லுவது வேறொன்றுமன்று. ஜனனங்களைக் கொடுக்கிற வாசனையே மனமாம். தன்னைத் தெரிந்துகொண்டால் அந்தக்கவலையில்லை. தடையறப் பார்த்தவர்கள் கருமங்களிற் சஞ்சரிக்கினும் அது சுத்த வாசனையாதலால் மறுபிறப்பைக் கொடாது. அம்மனதை சத்துவமென்பர். ஞானமில்லாத மனதை மனமென்று சொல்லுவர்கள். குற்றமற்ற ஞானிகள் சாத்வீகத்திலிருப்பார்கள். யாதொன்று சொர்க்க மோக்ஷங்களாகிய வனைத்தையுந் தருகின்றதோ அச்சகலத்தையுந்தள்ளி சமமான சுயம்பிரகாசமானால் எதாகின்றதோ இவ்விடத்தில் அது நீராவீர். அதுவேயுமது ஸ்வரூபமாகும் ஹீனமான பதார்த்தங்கள் ஒன்றையுங் கொள்ளாமல் திடமாகவிருப்பீர். மனமற்றவர்களுக்கு பிறவி வெகுதூரத்திற்செல்லும். இப்பூமியில் துன்பமானது சற்றும் சேரிடாது. பயப்படுகின்ற மனமானது சஞ்சலத்தினுண்டானதாகும். அசைவும் அசையாமையுமிரண்டையு மொன்றுக்கி சஞ்சலத்தைக்கெடுத்து ஞானவடிவாகி நிற்பீரென்று கும்பமுனி சொல்ல, அரசனவரைநோக்கி அவ்விரண்டுக்கும் ஐக்கியமெப்படியாமென்றுகேட்க, கும்பமுனி சமுத்திரஜலம்போல உலகெல்லாம் ஏகமாகிய சின்மாத்திரமேயாகும். அதுதான் புத்தியை கவருதலால் ஜலமானது பேரலையினால் அசைகின்ற தன்மையைப்போல அசைவுறும். ஆத்ம உணர்வுமாத்திரமாயும் சத்தியமாயும் இருந்த பிரம்மம் முதலாகிய வனேக நாமங்களையுடையதாகும். இப்படி சொல்லிய பரவஸ்துவை ஜகத்தென்று மதித்து மூடர்கள் பார்ப்பார்கள். சித்தானது கொஞ்சமசைந்த மாத்திரத்தில் ஜகசிருஷ்டியுண்டாகும். அதனை நன்றாய்ப்பார்த்தால் ஒழிந்துபோம். அறியாத்தன்மையினால் பழுதையில் பாம்

வென்பவர் போல திருசியமாக பார்த்தார்கள். பிரத்தியக்ஷமாகிற ஞானநூல்களாலும் சாதுசங்கத்தாலும் தடையற்ற அப்பியாசத்தாலும் சிலநாள்களில் மனமானது விமலமாக சந்திரனைப்போல நின்றால் பழமையான அனுபூதிமயமாகவேயிருக்கும். ஞானசம்பத்துள்ளவர்களுக்கு இந்தப்பார்வைதோன்றும். உலகத்தின் உற்பத்தியையும் தத்துவத்தையும் சொன்னேன். இந்த அர்த்தத்தை சுகமுண்டாக அப்பியாசித்து வழுவாமல் (நீங்குதலில்லாமல்) நேரிட்ட வினைத்தையும் மெய்ப்பதத்திற்காகச் செய்யக்கடவீர். நான் சொர்க்கத்திற்குப்போவேன். அவ்விடத்திலென் தந்தை நாரதர் என்னைக்காணாதிருந்தால் கோபிப்பார். ஓ அரசனே மயக்கமில்லாமல் வேற்றுமையைக்கெடுத்து மகிழ்ந்து இந்த நோக்கத்தில் நிற்கக்கடவீர். நாம்போவோமென்று கும்பமுனி மறைந்தனர். அரசன் நினைக்கிறான். குளிர்ச்சி, பரிசுத்தம், சாந்தம், தெளிந்த வமுத ஊற்றுக்கொப்பாகியிருக்கின்ற இந்த ஒப்பற்றபதவி எனக்குள்ளிருந்தவிதம் என்னவாச்சரியம்! குற்றமற்றவென்னை சத்துவத்தில் விஸ்ராந்தியடையச் செய்ததென்று வாசனையொன்றுமில்லாமல் அசைவற்று நிலையில்நின்று மௌனமாகி கல்லைப்போல நிர்விகற்பசமாதியில் நின்றான்.

கும்பமுனி தன்னுடைய சூடாலை வடிவத்தை யுடையவளாகி ஆகாயத்திற்போய் தன் பட்டணத்தையடைந்து அந்தப்புரத்தில் பிரவேசித்து அரசாக்ஷியில் நின்றாள். மூன்றுவருஷகாலமவ்விடமிருந்து திரும்பவுங் கும்பமுனியாகி கணவனிருக்குங் காட்டையுடைந்து அவனை நிற்விகற்பசமாதியில் தூணைப்போலிருக்கக்கண்டு நமது வரவை தெரிவிப்போமென்று சிங்கத்தொனியினால் சத்தித்தவளவிலும் அவனறியாதிருந்தான். மேலும் மேலும் சத்தித்தும் அவனைக்கீழேதள்ளியு மறியாமலிருந்தான். இதென்னவென்று வியப்புற்று தனக்குள் சொல்லத்தொடங்கினாள். அரசன் ஆத்மபதத்திற்கலந்தான். இச்சரீரத்தில், அறிவிற்கு வித்தாகிய சத்துவசேஷமிருக்குமாயின் நாயகனைச்சேர்ந்து கிரமமாக வாழ்வோம், அது இல்லாவிடில் நமது பெண்ணுருவத்தைவிட்டு மறுபிறப்பை யடையாதபடி பரமபதத்தையடைவோம், இது நிச்சயமென்று சிந்தித்து, பரிசத்தாலும் கண்ணினாலும் பார்த்து அரசனிருதயத்தில் அறிவுக்கு வித்தாகிய சத்தில் அவ்வறிவு ஜீவன்முத்தி பரியந்தம் கரையாமலடங்கி நுண்ணியதாய் மிஞ்சியிருக்குமல்லவா? இது பிராரப்தானுபவ

தைக் கொடுக்குமல்லவாவென்று பரிசோதித்து சத்துவசேஷமிருக்கக்கண்டு உடனே கும்பமுனி தன்சரீரத்தைவிட்டு குற்றமற்ற ஆதியந்தமில்லாத அறிவினம்சமாய் அரசனிருதயத்திற்புகுந்து சத்துவசேஷமடைந்திருக்கின்ற அவன் மனதை அசையப்பண்ணி தனது சரீரத்தைத் திரும்பி வந்தடைந்து பூமிமேல் ஆசனத்திலிருந்து சாமகானஞ்செய்துக்கொண்டிருக்க, கம்பம்போலிருந்த வரசன் தேகத்தின் சத்துவ ஞானமானது அந்த ஓசையைக்கேட்டு மெல்ல மெல்ல விரிந்தது. அவனுடையமனது வெளியாய் கும்பமுனியைக் கண்டு களிப்புடைய மனத்துடன் அருளால் தன்னை வாழ்விக்கும்பொருட்டு முன்பெழுந்தருளிய குருநாதன் சுயமாகவேவந்தாரென்று நல்ல புட்பங்களைச்சொரிந்து வணங்கி துதிசெய்துநிற்க, கும்பமுனி அரசனை நோக்கி உம்மை பிரிந்ததுமுதல் உம்மிட மென்மனமானது பிரிவற்றிருந்தது. தெய்வலோகமும் உமது சங்கம்போல இன்பமல்லவென்றுசொல்ல, அரசன் அம்முனியைப்பார்த்து அண்ணலே! தேவரீரால் வாழ்வைப்பெற்றேன், பரிசுத்தமாகிய சுகசமாதியில துன்பமற்றேன். அவ்வானந்தம் சுவர்க்கத்திலுமில்லை. அதனை யடைந்து மண்ணுலகிலும் பொன்னுலகிலும் உலாவுவெனென்றுசொல்ல, கும்பமுனி அவனைநோக்கி அவ்வானந்தவாழ்வில் துயரங்களனைத்தும் நீங்கசுகித்தீரோ? வென்ன, நின்னருளாலும் பகவத்கிருபையாலும் திருசியமனைத்தும் நீங்கின. திருக்கில் மனது நிலையாயிற்று, மாயையின் கரைகண்டேன். கேட்கவுங் காணவும் விரும்பவுமொன்றில்லை. துன்பத்திலிருந்து நீங்கினேன். பயமற்றேன், மயக்கமற்றேன், ஆசையொழித்தேன், செயலற்றேன், ஆகாயத்தைப்போலத் தெளிவாய் உபசாந்தத்தையடைந்தேன் என்றரசன் சொன்னான்.

அப்படியே இருவரும் ஆத்துமதத்துவத்தின் விசாரணையிலும் தெளிகின்ற வசனங்களினாலும் அன்பில் மிகுந்தவர்களாய் பகவதனுபவத்தைப்பெற்று தங்களிற்றங்கள் கானங்களிலும் மலைகளிலும் எவ்விடத்திலும் சஞ்சரித்து சுகித்தார்கள். சுபாவஞானத்திலும் அன்புள்ள தொழில்களிலும் இராகத்துவேஷங்களைவிட்டு இன்புற்று சிறிதுநாள் வாழ்ந்திருக்க சூடாலை தனக்குள் நினைப்பாள். அரசன் அனுபூதியில் மிகவு முறுதியுள்ளவனாய் துன்பத்திலிருந்து நீங்கினான், இளமையும் சம்பத்தும் இராஜ வாண்பனையும் சுகிக்கின்றவரில்லாமையால் வீணாய்ப்போகுறது, ஞானம்பெற்றோர், சுபாவமாகவந்ததை விடுவார்களானால் தத்துவத்தை யறிந்தென்னப்

பிரயோஜனம்? கல்லியாணஞ்செய்வதற்கொரு ஸ்திரீயை யிவ்விடத்திலுண்டாக்குவோ மென்று மனதில் நினைத்து நாயகனை நோக்கி கும்பமுனியான சூடாலை சொல்லுவாள், தேவலோகத்தி லின்றையதினமோர் திருவிழாவுண்டு. நாரதருட னவ்விடமிருக்க வேண்டும். சூரியனஸ்தமிக்குஞ்சமையத்தில் திரும்பி யிவ்விடம் வருவேன். நீரிவ்விட மிருப்பீரென்று, வாசனை பொருந்திய ஓர் புஷ்பக்கொத்தை அரசன் கையிற் கொடுத்து ஆகாயத்தி லெழும்பி அவன் கண்ணுக்குத் தெரியாதவரைக்கும் போய் அவ்வடிவத்தைவிட்டு சுயரூபத்துடன் யாருமறியாதபடி அரண்மனைக்குட் சென்று இராஜகாரியங்களை முறைமையாகச் செய்து திரும்பவும் கும்பமுனிவடிவமாகி நாயகனிடத்தில் வந்திறங்கி வாடிய முகத்தையுடையவள் போலாகி யிருக்குமளவில், அரசன் நோக்கி சீக்கிரமாக வெழுந்து பிரார்த்தனை செய்து எனது பிதாவே, துன்பமடைந்தவரைப் போலக் காணப்படுகின்றீர், துன்பமென்ன? உண்மைஞானமடைந்தவர்கள் தளரார்கள், சந்தோஷியார்கள், தாமரையில் ஜலம் பொருந்துமோ? என்றரசன் சொல்ல. வஞ்சவடிவத்தையுடைய கும்பமுனி சித்திரமான ஓர்சரித்திரத்தைச் சொல்லுற்றார், சமத்வமனதைச் சேர்ந்தவர்கள் தேஹமிருக்குமட்டும் கன்மேந்திரியங்களோடு பொருந்தார்களாயின் ஞானிகளல்ல, வஞ்சகராவர்கள். தானேவந்தடைகின்ற வவஸ்தைகளை ஜெயஞ்செய்யக் கருதி ஞானமில்லாதவர்கள் விருதாவாக மெலிந்துவிடுவார்கள், எள்ளுள்ளமட்டும் எண்ணெய் நீங்காததுபோல சரீரமுள்ளவும் நாநாவிதமான அவஸ்தைகள் நீங்கமாட்டாது. இவ்வவஸ்தைகளைக் கெடுக்கவேண்டுமென்பது, அளவிடக்கூடாத வாகாயத்தை கத்தியினால் அறுப்பவர்களுக் கொப்பாகும், பிரமன் முதலாகிய யாவரும் தெளிவுள்ள குணத்தையுடையவராயினும் சரீரவவஸ்தையானது நீங்காதென் றனுபவித்து வருவார்கள். ஞானியும் அஞ்ஞானியும் திருஷியவஸ்துக்கள் போலிருப்பதால் சமுத்திர ஜலம் போல நியதியின் வசத்திற் செல்லுவார்கள். அதில், சமபுத்தி நிலையால் ஞானிகள் சஞ்சரிப்பார்கள். அஞ்ஞானிகள் கலக்கமுற்று சுகதுக்கங்களி லமிழ்ந்தும் அனேகதேஹங்க ளெடுத்தும் விதியைப் பின் செல்வர். நான், பட்டதுன்பங்களைக் கேளாய், புட்பக்கொத்தைக் கொடுத்து உம்மை நான் நீங்கி ஆகாயத்திற் சென்று தெய்வலோகத்தில் பிதாவையடைந்து இந்திரன் சபையினிடம் போய்

திரும்பியும் இவ்விடத்திற்கு ககனமார்க்கமாக வருமளவில் தூர்வாசரென்கிற ரிஷியை நேரே பார்த்து அவர்பாதங்களில் வணங்கி அவரைநோக்கி ஸ்வாமி! நீர் கரியவஸ்திரத்தை தரித்தீர், தூர்த்த புருஷனை பிச்சிக்கின்ற விபசாரி ஸ்திரீயைப்போல போகின்றீரேயென்றேன். அதற்கு அம்முனிவர் மிகவுங் கோபித்து இப்படி சொல்லுதலால் இராத்தோறும் பெண்ணுருவாயிருக்கக் கடவையென்று எனக்கு சாபமிடவும் அவ்வசனத்தைக் கேட்டு இரக்கமடைந்து அம்முனிவர் பாதங்களைத் துதித்து வேண்டிக்கொள்ளச் சிந்தித்தேன். நொடியிலவர் மறைந்துபோனார். அதைப்பார்த்து மனம் வருந்தி இவ்விடத்தில் வந்தேன். பெண்ணுரும் குணம் எனக்கு நீங்காது. தேவ முனி கணங்களின் கூட்டங்களைக் கண்டால் நாணமுறாமல் இரவில் பெண்ணாகி யெப்படி இருப்பேனென்ன, அரசன் சொல்லுவான். தேவரீர் பயப்படாதிரும். புலம்புதலால் பிரயோஜனமென்ன? விதியின் வலிவால் வருவதுவரட்டும். அது சரீரத்திற் கல்லாமல் களங்கமற்ற வாத்மாவுக்குப் பொருந்தாது. ஞானத்தாலுயர்ந்த நீர் துயருறுவதென்? அறிவில்லாத மூடர்களல்லவா துன்பப்படுவார்களென்று தெரிவித்து தங்களிருவர்கள் பிரியாமல் சுகதுக்க பேதமில்லாமலிருந்தார்கள். சூரியாஸ்தமித்தவளவில் நித்தியகருமங்களைச் செய்திருக்கக் கும்பமுனி அரசனைநோக்கி ஐயா! பாரும் பெண்தன்மையானது என்னைச் சுற்றிக்கொண்டதென்று துன்பமுறுவாளைப் போல்காண்பிக்க, அரசன் பார்த்து நீர் தெளிவையுடைய ஞானியாயிற்றே! வரத்தக்கதுவந்தால் துன்பமேன் அடைகிறீரென்ன, கும்பமுனி இனிச்செய்யவேண்டியதென்ன? தவறாத நியதியை யார்தடுப்பார்களென்று இரவில் பெண்வடிவத்தைக்கொண்டு ஒருசயனத்தி லிருவரும் சும்மா நித்திரைசெய்தார்கள். விடிந்தவுடன் பெண்ருபத்தைவிட்டு கும்பமுனி வடிவமாக நிற்பன். இப்படி இரவில் பெண்ணாகவும் பகலில் கும்பமுனியாகவும் கன்னித்தன்மை கெடாமல் சிலநாள் கூடியிருந்தனர்.

இப்படி நடந்துவர மூன்றுபகலில் சூடாலை கும்பமுனி வடிவத்துடன் அரசனைப்பார்த்து ஓ ராஜனே! நாள்தோறும் இரவில் பெண்தன்மை வருதலால் ஸ்திரீகளினியல்பைவிட்டு எத்தனைகாலமிருப்பது? ஒருநாயகனை யடையவேண்டுமே? அன்பின் மிகுதியால் உம்மையல்லாமல் திரிலோகத்திலும் மற்றொருவரையும் நான் விரும்பேன். கலியாணத்தால் மனைவியாக வென்னை இரவுகாலந்

தோறும் வசிப்பீர். இப்படி செய்தால் நன்மை தீமையெனு மிரண்டில்லை யென்றுசொல்ல, அரசன் நல்லதென்றிசைய, கும்பமுனி சொல்லுவார், அரசனே! இன்றைக்கு ஆவணிமாசம் பருவம், மாங்கல்லியந்தரிக்க நல்லதினம், சந்திரோதயகாலத்தில் விவாகஞ் செய்துக்கொள்ளுவோமென்று சொல்லி இரத்நாபரணங்களும், சந்தனமும், பர்வதங்களிலிருந்து கொண்டுவந்து கங்கையில் ஸ்நானஞ்செய்து வேதமார்க்கத்தினால் பித்ருதேவ முனி கணங்களை வணங்கி கிர்யைகளை யொழியாதவரும் பலத்தை விரும்பாதவருமான இவர்கள் கற்பகவிருக்ஷங்கொடுத்த வெள்ளைப்பட்டுவஸ்திரத்தைத் தரித்து இரவிற் சந்திரோதயமானவுடன் இருவரும் காந்தர்வ விவாஹஞ் செய்துக்கொண்டார்கள்.

பின்பு அவ்விருவரும் பற்றில்லாத சுகத்தைப்புஜித்து வனங்களோறும் சஞ்சரித்துக்கொண்டிருப்பார்கள். மூன்று நாளைக்கொருதரம் அரசன் நித்திரைசெய்யும் சமயத்தில் சூடாலைப் பட்டணத்திற்கேகி அரசாங்கத்தின் காரியங்களைப் பார்த்துவந்து படுக்கையில் நீங்காதவளைப்போல திரும்பி வந்துவிடுவாள். மணம் புரிந்து முதல் மதனிகையெனும் நாமத்தை யுடையவளாய் சிலநாள் கழித்து அரசனுக்கு இஹலோக போகங்களில் ஆசையில்லையென்றறிந்து தேவலோக போகங்களிலபேக்ஷை செலுத்துவனோவென்று பரிக்ஷை செய்யும்பொருட்டு தான் கற்ற அணிமா முதலிய சித்திகளினால் தேவர்கள் சுற்றும் சூழ்ந்துவர தேவேந்திரனை அக்காணகத்திற் றோன்றும்படி ஒருமாயை செய்ய, அவ்விந்திரனை அரசன் கண்டு நமஸ்கரித்து ஓ தேவராஜரே! நீரிவ்விடம்வர என்ன தருமத்தை நான் முன்செய்தேனோவென்று சொல்ல, இந்திரன் அரசனைப்பார்த்து ஓ ராஜனே! உமது நற்குணங்களைக்கண்டு தேவர்களோடு இங்குவந்தேன். சொர்க்கத்திலுமதுவரவை அவ்விடத்திய ஸ்திரீகள் எதிர்பார்த்திருக்கிறார்கள். நீர் வரக்கடவீர். கற்பகாலமட்டுமிருந்து தேவபோகங்களனைத்தையும் புசிக்கக்கடவீர். உம்மை அழைக்கவந்தேனென்று சொல்ல, அரசன் சொர்க்கத்திலுள்ள சுகங்களெல்லாம் இவ்விடத்திலென்று மனுபவிப்பேன். இங்கு அங்கு என்னும் பேதமில்லை. அடியேனுக்கு எவ்விடத்தும் சுகமேயாம். ஆனதால் தேவலோகத்தை வேண்டேன். நீர் வாசஞ்செய்கின்ற இடத்திற்குச் செல்வீரென்று சொன்னான். தேவ சமூஹங்கள் வந்தவழியே போனார்கள்.

திரும்பியுஞ் சூடாலை குரோதபுத்தி தன் கணவனுக் குண்டாமோ வென்று பரிக்ஷிக்கும் பொருட்டு தனது மாயை வித்தையினுல் ஒரு தினத்தில் சந்திரோதயமான சமயத்தில் அரசன் கங்காதீரத்தில் ஜபம் செய்துக்கொண்டிருக்க சூடாலை புறம்பாகிய அங்கோரிடஞ்சென்று கொங்குமலர்களினுல் நிரம்பியிருக்கு மழகிய ஒரு சயனத்தில் ஒரு தூர்த்த புருஷனைத்தானுண்டாக்கி அவனைக்கூடியிருந்தாப்போல் காண்பித்தாள். அரசன் சந்தியாவந்தனஞ்செய்து மதனிகையெனுந் தன் மனைவியை மலைப்பக்கங்களெல்லாந்தேடி வரும் மார்க்கத்தில் தூர்த்தனுடன் கூடி களிக்கின்ற அவளைப்பார்த்து விகற்பமில்லாமல் மகிழ்ச்சியுடன் விக்கினமில்லாமல் நீங்களிருங்கோளென்று சொல்லிப்போனுன். பின்னர் ஒரு முகூர்த்தம் கழிந்தபின் அம்மாது வெட்கத்துடன் வணக்கமுற்றவளைப்போல் அரசன் முன் வந்து நின்றனள். அவ்வேளையி லரசன் சமாதியில் நின்றுன். பின்பு தெளிவுற்றுப் பார்க்குமளவில் மதனிகையை யெதிரிலிருக்கக்கண்டு கோபமில்லாமல் சாந்த முடையவனுய் அவளை நோக்கி, ஓ மாதே! நாயகனைவிட்டுச் சீக்கிரமாக வந்ததென்ன? திரும்பிப்போய் சுகத்தை அடையக்கடவாயென்று அரசன் சொல்ல, மதனிகைக் கணவனை நோக்கி, குற்றமற்றவர்கள் மூடர்களுடைய பலகுற்றங்களைச் சஹிப்பது மேலான கீர்த்தியாம், பெண்களின் குணம் அநந்தபேதமாய் மயங்கும். ஆசையோ மட்டுப்படாம். ஒருகாரியமுந் தெரியமாட்டார்கள். ஆதலா லென்னுடைய தப்பிதத்தை க்ஷமித்தருள்வீரென்று சொல்ல, அரசன் ஆகாயத்தில் ஓர் மாமுண்டானுலும் கோபமென்னிடத்தில் வரமாட்டாது. சத்துருக்கள் நிந்திப்பார்களென் றுன்னுவதேயன்றி உன்னைப்பெண்ணென விரும்பவில்லை யென்று சொன்னுன். தன் கணவன் சமத்துவமுள்ள திருஷ்டியிலிருந்து காமத்தையும், குரோதத்தையும், சமூலமாகக் கெடுத்தானென்றும் செல்வமும் சித்திகளு மிவனை மேலிடாவென்றும் ஞானத்தின் கரைகண்டு சேர்ந்தானென்றும் தான் மறைந்திருப்பது போதுமென்றும் நினைத்து மதனிகையுருவத்தை விட்டு தனக்கு முறைமையாயுள்ள சூடாலைவடிவத்தை யுடையவளாய் அரசன்முன் தோன்றவும், உபசாந்தமுடைய வச்சிகித்துவஜன் கண்டு அதிசயமுடையவனுய் வடிவும் வார்த்தையும் ஒடுக்கமும் இன்னமுண்டாகிய சகல குணங்களுமுடைய சூடாலையைப்போல் தோன்றினுய், நீயாரென்று நிருபன் கேட்க, நீர் கலியாணஞ்செய்

ச சூடாலை நானென்றுசொல்லி, கும்பமுனி வடிவத்தையும் மதனி
கை வடிவத்தையும் கொண்டு உம்மை யுணர்த்தினேன், ஞானத்
தின் நிச்சயத்தை யிவ்விடத்தில் மாயையினால் சோதனை செய்தே
ன், இவைகளை நீ நிஜானந்தத்தில் பார்ப்பாயென்று சொல்ல,
ஞானயோகமான தியானத்தால் அரசன் பார்க்க; நகரத்தை நீங்கி
னது முதலாக தன்னனுபவத்தை விளக்கின கும்பமுனியும் மத
னிகையும் தேவகணங்களும் தூர்த்தனும் யாவும் சூடாலையாக விரு
க்கப்பார்த்து தியான நீங்கி புளகிதகாத்ரனாய் சூடாலையானவள்
தயையும் ஆசையும் ஆதாரமாக உடையவளென்று தன் துடைமே
லிருத்திக்கொண்டு அவளைக்கையால் தழுவிக்கொண்டு வெகுநேரமி
ருந்து ஒன்றையுஞ் சொல்லாதவனாய் அரசனான சிகித்வஜன் ஆனந்
தத்தில் முழுகினான். பின்பு தன் மடியிலிருக்குமவளை நோக்கி அள
வற்ற மோஹத்திலிருந்த வென்னை விசாலவறிவினால் கரையேற்றி
னாய். உனக்கார் ஒப்பானவர்கள்? இதற்கோர் கைம்மாறு
ண்டோ? சமுசாரக்கடலைக் கடந்தவளே! நிராசையைப்பொ
ருந்துகின்ற தருமரூபியானவளே! இதற்கென்ன பிரதியுபகாரமி
ருக்கிறதென் றரசன் சாற்ற, சூடாலை அறிவின்றி ஆரண்ணியத்தில்
வாட்டமுற்ற உம்மை கரையேற்ற வருத்தமுற்று வந்தேன். நீரி
தற்கு என்னை மேம்பாடாகச்சொல்லுவதென்ன? சங்கற்ப விகற்ப
ங்களெல்லாம் நீக்கினீரன்றோ? என்று சொல்ல, அரசன் சந்தேஹ
ம் நீங்கினேன், ஆசையற்றேன், வேற்றுமையற்றேன், சொச்ச
மான வாகாயத்துக் கொப்பானேன், மகிழ்ச்சியும் துயரமும் பொ
ருந்திலேன். இது வதுவென் றுளங்கேன், நிறைதலும் குறைதலு
மில்லாத ஒப்பற்ற ஓர் ஞானப்பிரகாச மென்னை கவரிக்கொண்
டது; வேறொன்று சொல்லவறியேன்; ஆதலாலடியேனுக்கு கிரு
பைசெய்த ஆசாரியர் நீயே; உனது தாமரைமலர்போன்ற பாதத்
தை வணங்கினேனென்று சொல்ல, சூடாலை யினிசெய்யுங்காரியத்
தை சொல்லுமென்று கேட்டாள். அரசன், ஒரு பற்று மெனக்கி
ல்லை உன்சொற்படி செய்வேனென்றான். அதற்கு சூடாலை நீரடைந்
தது இதுவானால் அஞ்ஞானமொன்றை (தேஹம் நானென்பதை)
தள்ளி முன்னுள்ள அரசியலிலிருப்பதே நியாயமாம். நாமப்படி
சிறிதுநாள் ஜீவன்முக்தராயிருந்து சரீராந்தத்தில் விதேஹமுக்தி
யை யடைவோமென்ன அரசனுஞ் சம்மதித்தான். பின்பு சூடாலை
யெழுந்து சித்தி சங்கற்ப நியமனத்தால் இரத்தின கும்பங்

களில் சப்தசமுத்திர ஜலத்தைத் தருவித்து அரசனை அபிஷேகஞ்
செய்வித்து இரத்தினாசனத்தில் பிரகாசிக்கும்படி இருத்தி வாழக்
கடவீரென்று சூடாலைப்பட்டாபிஷேகஞ்செய்தாள். யானை குதி
ரை பதாதிகளின் சமூஹமும் இரதங்களுங்கூடிய அளவற்ற படை
களை யுண்டாக்கி சூடாலையு மரசனும் யானைமேலேறி சதுரங்க
சேனையுடன் பிரயாணமாகித் தாங்களரசுபுரியும் பட்டணத்தை
சேர வெழுந்தருளினபோது, நகரத்திலுள்ள சதுரங்கசேனையும்
சேனைத்தலைவர் முதலோர் எதிர்கொள்ள அன்புடன் பட்டணத்
தை யடைந்து பதினாயிரம் வருடம் அரசன் நாயகியுடன் கூடியிரு
ந்து அழிவில்லாத பதத்தைப்பின்பு இருவருமடைந்தனர்.

இம்முறைமையினால் தொழில்களைச்செய்துதள்ளாநின்ற விஷய
சுகமில்லாத உபசாந்த ஞானமானது சதாகாலமும் தொடர்ந்
திருந்தால் தெளிவான போகமும் மோக்ஷமுங் கிடைக்குமென்று
தெளிந்த மனதையும் மகாதவத்தையுமுடைய வசிட்ட மகாமுனி
ஸ்ரீராமபிரானுக்குச் சொன்னார்.

இக்கதையால் நிஷ்காமமான ஈஸ்வரோபாசனை, ஞானத்திற்
குச் சாதனமென்றறியப்படும். சிகித்வஜ ராசனுக்கு முதலிலது
இல்லாததனால் ஞானநுட்பம் மனதிற் படவில்லை. அவ்வுபாசனை
செய்தபின் தெளிவுற்று ஞானத்தைப்பெற்று பகவதநுபவத்தில்
விஸ்ராந்தியடைந்தான்.

முற்றிற்று.

ஸ்ரீ கிருஷ்ணார்ப்பணமஸ்து.